**மொனராகலை பிரதேச சபை**
**மொனராகலை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 யூன் 23 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூன் 29 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மொனராகலை பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் செலவடப்பட்ட ரூபா 294,900 ஆன மூலதனச் செலவினம் மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்படும் நிலையான சொத்துக்கள் மூலதனச் செலவினமாக கணக்கீடு செய்யப்படுமென அறியதருகின்றேன். |
| (ii) | முன்னைய ஆண்டிற்காக செலவிடப்பட்ட ரூபா 123,017 மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டில் சரியாக கணக்கீடு செய்யப்படுமென அறியத் தருகின்றேன். |
| (iii) | உள்ளூராட்சி மன்றங்களிடமிருந்து மீள்நிரப்பப்பட வேண்டிய பிரதேச அபிவிருத்தி உதவிச் செயற்திட்டத்தின் பங்களிப்பு அபிவிருத்தி திட்டத்தை தயாரிப்பதற்கு செலவிடப்பட்ட ரூபா 97,111 ஆன பெறவேண்டிய | சரியாக கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டில் பெற வேண்டிய தொகையாக சரியாக கணக்கீடு செய்யப்படுமென அறியத் தருகின்றேன். |

தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 925,952,768 தொகையான 03 காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக மதிப்பீட்டு அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களை காணப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | காணி தொடர்பான தேவையான தகவல்கள் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் 6 மதிப்பீட்டு அறிக்கைகள் கிடைத்துள்ளதுடன் எஞ்சிய காணிகளுக்குரிய மதிப்பீட்டு அறிக்கைகள் இதுவரை கிடைக்கவில்லையென அறிய தருகின்றேன். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்ளுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | | | |
| 139 ஆம் பிரிவு | ஆதனவரி அறவிடக்கூடிய எல்லைக்குள் அமைந்துள்ள வரி அறவிட முடியுமான சகல ஆதனங்களும் இனங்காணப்பட்டு மதிப்பீடு செய்யும் பணிக்கான தவணை அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு செய்யும் பணிக்காக தவணை அறிக்கை கோரப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான தரவுகளை உட்படுத்தி தகவல் பத்திரமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் தொற்று நிலைமை முடிவடைந்தவுடன் அச் செயற்பாடுகளை ஆரம்பிக்குமாறு வருமான |

| | | | |
|---|---|---|---|
| | | | பரிசோதகரர்களுக்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை<br>-----------------------------<br>XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவு | 15 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கொண்டு வரப்படுகின்ற சபையில் சேவை புரிந்த 06 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 246,759 கூட்டுத் தொகையான ஊழியர் கடன் அறவிடப்பட்டிருக்க வில்லை | நிலுவை ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கோவைகள் மற்றும் பிணையாளர்களின் தகவல்களை கண்டுபிடிப்பதற்கு ஆவணங்கள் இல்லாமையால் இது தொடர்பாக தீர்மானமொன்று எடுக்க முடியாதுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 18,842,362 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 13,289,271ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 12,985,000 | 12,411,917 | 6,341,709 | 6,070,208 | 12,869,609 | 11,970,956 | 6,227,817 | 5,743,139 |
| (ii) | வாடகை | 20,445,140 | 2,982,950 | 2,982,950 | - | 12,583,950 | 2,610,077 | 2,608,135 | 1,942 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,335,100 | - | 1,612,878 | - | 1,045,100 | 1,353,900 | 1,359,900 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 22,292,500 | 32,710,844 | 27,097,688 | 5,613,156 | 1,089,000 | - | 20,405,302 | - |
| | மொத்தம் | 51,057,740 | 48,105,711 | 38,035,225 | 11,683,364 | 27,587,659 | 15,934,933 | 30,601,154 | 5,745,081 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட ரூபா 12,411,917 தொகையான ஆதனவரி வருமானத்தில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,309,190 தொகை சேகரிக்கப்படாதிருந்ததுடன் அது மொத்த சிட்டையிடப்பட்ட வருமானத்தில் 51 சதவீதம் ஆகும். | நிலுவை ஆதனவரி அறவிடப்பட வேண்டும். | 2020 மே 31 வரை வீதவரி அறவிட வேண்டாமென அறிவித்துள்ளதால் எதிர்காலத்தில் திட்டமிடப்பட்டிருந்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |
| (ஆ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 16,567,232 தொகையான நிலுவை ஆதனவரி வருமானத்தில் ஆண்டின் போது ரூபா 10,221,375 அறவிடப்பட்டிருக்கவில்லை. அது அறவிடப்படாமல் நிதியாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவையில் 62 சதவீதம் ஆகும். | நிலுவை ஆதனவரி அறவிடப்பட வேண்டும். | இந்த நிலுவையை அறவிடுவதற்கு வெவ்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதாகவும் உத்தியோகத்தர்களுக்கு நிலுவையை அறவிடுவதற்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 10,000 தொகைக்கு மேற்பட்ட நிலுவை | நிலுவை ஆதனவரி அறவிடப்பட | 2020 மார்ச் 30 ஆந் திகதி வரை 41 வீதவரி அலகுகளிலிருந்து ரூபா |

| | | |
|---|---|---|
| ஆதனவரி அலகுகள் 146 இலிருந்து அறவிடவேண்டிய பணம் ரூபா 3,378,476 ஆகும். | வேண்டும். | 452,988 தொகை அறவடப்பட்டிருந்த போதும் எஞ்சிய பணத்தை அறவிடுவதற்கு வருமான பரிசோதகரர்களுக்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |

**2.2.3 ஆதனங்களை வாடகைக்கு விடல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குரிய 5 ஆதனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 591,650 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை | நிலுவைப் பணம் அறவிடப்பட வேண்டும். | 2020 மே 20 ஆந் திகதி ரூபா 77,112 அறவிடப்பட்டுள்ள தாகவும் செலுத்தப்படாத ஆதனங்களுக்காக சட்ட நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |

**2.2.4 கடைகளின் வாடகை வருமானம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குரிய 153 கடைகளிலிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய கடை வாடகை ரூபா 1,433,325 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை | நிலுவைப் பணம் அறவிடப்பட வேண்டும். | 2020 மே 20 ஆந் திகதி ரூபா 869,058 தொகை அறவிடப்பட்டுள்ளதாகவும் எஞ்சிய தொகையை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |

**2.2.5 நீர்க்கட்டண வருமானம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 616,450 தொகையான நீர்க்கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை நீர்க் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | 2020 மார்ச் 13 இல் ரூபா 99,100 அறவிடப்பட்டதாக அறிய தருகின்றேன். |

### 2.2.6 ஏனைய வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆண்டு 1 இற்கு மேற்பட்டதாக இருந்து இனங்காணப்படாத நிலுவையான ஏனைய வருமானம் ரூபா 5,260,292 மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகையை துரிதமாக அறவிடப்பட வேண்டும். | குறித்துரைக்கப்பட்ட அட்டவணைகள் காணப்படாமையால் கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்பதற்கு முடியாதிருந்ததாகவும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்கு சமர்ப்பித்து தீர்வினைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |

### 2.2.7 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 691,125 தொகை மற்றும் நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 26,431,308 தொகை என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன அறவிடப்பட வேண்டும். | 2020 ஏப்ரல் 16 ஆந் திகதியில் ரூபா 596,793 ஆன நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 7,031,516 தொகையான முத்திரைக் கட்டணங்கள் கிடைத்துள்ளதாகவும் எஞ்சிய பணத்தை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |

### 2.3 மிகைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்தவர்களுக்கு எதிராக முன்னைய ஆண்டின் போது வழங்கப்பட்ட மிகைக் கட்டணம் தொடர்பாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 422,730 தொகை அறவிட வேண்டியதாக இருந்தது. | உரிய தரப்பினரிடமிருந்து மிகைக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | ரூபா 291,600 ஆன மிகைக் கட்டணத்திற்குரிய வழக்கின் பிரகாரம் குறித்த சிறைத் தண்டனை அனுபவிப்பதால் நீதிமன்றத்திலிருந்து |

| | | |
|---|---|---|
| | | விடுவிக்குமாறு மீண்டும் வழக்கு தொடரப்பட்டுள்ளது. வழக்கு அறிக்கை கிடைத்ததன் பின்னர் எதிர்வரும் நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். ரூபா 155,080 ஆன மிகை அறவீட்டிலிருந்து இதுவரை ரூபா 25,500 அறவிடப்பட்டுள்ளதுடன் அந்த இரண்டு நபர்களும் மரணித்திருப்பதால் இருவரினதும் மரணச் சான்றிதழ்களும் உள்ளூராட்சி மன்றத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ரூபா 35,900 ஆன மிகை அறவீட்டிலிருந்து எஞ்சிய ரூபா 1,550 தொகை செலுத்தப்பட்டது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் ‘‘நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030’’ தொடர்பாக சபை அறிந்திருந்த போதிலும், சபைக்குரியதாக முடியமான வகையில் இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கு குறிகாட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்கு அடைதலின் | குறிப்பிட்ட முறைமையின் பிரகாரம் குறிகாட்டிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத பாதும் |

| | | |
|---|---|---|
| அளவிடுவதற்கான குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | முன்னேற்றம் அளவிடப்பட வேண்டும். | நடைமுறையில் செயற்பாடுகளுக் காக குறிகாட்டிகள் மற்றும் நியதிகள் இனங்காணப்பட்டு ள்ளதாக அறிய தருகின்றேன். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளல் சபையினால் வழங்கப்பட்டிருந்த 30 சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடிக்காலம் முடிவடைந்திருந்த போதும் அந்த அனுமதிப்பத்திரத்தை புதுப்பிபதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்தமையால் சபை நிதியத்திற்கு ஒரு அனுமதிப்பத்திரத்திற்கு ரூபா 4,000 வீதம் ரூபா 120,000 ஆன மொத்த வருமானமும் இழக்கப்பட்டிருந்தது. | இந்த வியாபாரம் பரீட்சிக்கப்பட்டு உரிய கட்டணங்களை அறறவிட்டு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்க ளின மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களை புதப்பிக்காத கைத்தொழில்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன் |
| (ஆ) | சபையினால் பராமரித்துச் செல்லப்படுகின்ற வீதி விளக்குகள் பதிவேட்டின் பிரகாரம் சபை பிரதேசங்களில் 1555 வீதி விளக்குகள் பொருத்தப் பட்டிருந்த போதிலும் மின்சக்தி மற்றும் எரிபொருள் அமைச்சின் செயலாளரின் 2010 ஆகஸ்ட் 17 ஆந் திகதி சுற்றறிக்கையின் மூலம் வீதிகளுக்கு வெளிச்சமிடல் தொடர்பாக இலங்கை மின்சார சபையுடன் உடன்படிக்கையில் | மின்சார சபையுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட வேண்டும். | பொது மக்கள் தேவைப் பாட்டை கருத்திற் கொண்டு மின்சார சபையின் ஆலோசணையின் பிரகாரம் தொடர் நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன் |

| | | | |
|---|---|---|---|
| | கைச்சாத்திட்டிருக்கவில்லை. இதன் காரணமாக சபைக்கு அறவிடக்கூடிய கட்டணங்களை அறவிடுவதற்கு முடியாமல் இருந்தது. | | |
| (இ) | 2000 முதல் 2018 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் சபைக்கு கிடைக்கப்பெற்றிருந்த 4 வாகனங்கள் / இயந்திரங்கள் சட்டரீதியாக உரித்தினை கையேற்கப்பட்டிருக்க வில்லை. | சட்டரீதியாக உரித்து கையேற்கப்பட வேண்டும். | தீயணைக்கும் வண்டியின் ஆவணங்கள் இல்லாதிருப்பதுடன் களி பௌசர் செயற்திட்ட மொன்றிடமிருந்து கீழ் கிடைத்துள்ளதால் அவற்றை பதிவுசெய்ய முடியாது. உழவு இயந்திரத்தின் அடிச்சட்டகத்தின் இலக்கத்தில் வேறுபாடொன்று உள்ளதுடன் எதிர்காலத்தில் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் ஒரு களி பௌசரின் கையேற்கும் செயற்பாடு இடம்பெற்ற வருவதாகவும் நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன் |
| (ஈ) | ஆதனவரி அறவிடுவதற்கு பொருத்தமான பிரதேசங்கள் 1979 ஆம் ஆண்டின் போது முதலாவதாக இனங்கண்டு மீண்டும் 2019 ஆம் ஆண்டில் முன்னேற்றமடைந்த பிரதேசங்களில் இனங்காணப்பட்டிருந்த ஆதனவரி அறவிடக்கூடிய பிரதேசங்கள் விரிவுபடுத்தப்பட்டிருக்கவில் லை. | காலத்திற்கு காலம் அபிவிருத்தி யடைந்த பிரதேசங்கள் இனங்காணப்பட்டு ஆதனவரி அறவிடப்பட வேண்டும். | இனங்காணப்பட்டுள்ள பிரதேசங்கள் தொடர்பாக எதிர்ப்பு உருவாகியதால் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஆலோசணையின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் 02 பதவிகளுக்குரிய 9 ஊழியர்கள் மிகையாகவும் 12 பதவிகளுக்குரியதாக 19 வெற்றிடங்களும் காணப்பட்டன. | மிகைப் பதவியணி பதவிகள் அங்கீகரிக்கப்பட வேண்டியதுடன் வெற்றிடங்களை நிரப்பப்பட வேண்டும். | மாதாந்த பதவியணியினர் அறிக்கை மூலம் உள்ளூராட்சி திணைக்களத்திற்காக தெரியப்படுத்தப்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | சபைக்குரிய 107 ஏக்கர் அளவான 68 காணிக் கூறுகளின் சட்டரீதியான உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் சபைக்குச் சொந்தமான 56 காணிக் கூறுகளுக்கு அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | சபைக்குரிய காணிகளை அளவீடு செய்து சட்டரீதியான உரித்தை கையேற்க வேண்டும். | நில அளவையாளர் திட்டம் கிடைக்கப் பெற்றவுடன் சட்ட ரீதியான உரித்தினை கையேற்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |
| (ஆ) | இறுதியாக 2009 ஆம் ஆண்டின் போது நாளதுவரை யாக்கப்பட்டிருந்த வீதிப் பதிவேட்டின் பிரகாரம் 334 வீதிகள் காணப்பட்டதுடன் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24(1) பிரிவின் பிரகாரம் அவ்வீதிகள் வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வீதிப் பதிவேடுகள் நாளதுவரையாக்கப் பட்டு வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 27 வீதிகளின் திட்ட வரைபடங்கள் தயாரிக் கப்பட்டுள்ளதுடன் மொழி பெயர்ப்பு கிடைத்ததன் பின்னர் வர்த்தமானியில் வெளியிடப்படுமென அறிய தருகின்றேன் |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக போதியளவு உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும். | உள்ளகக் கணக்காய்வு அறிக்கையொன்று விநியோகிப்பது தொடர்பாக பயிற்சி பெற்றுக் கொள்ளாமையால் அறிக்கை யொன்றை விநியோகிக்கவில்லை என அறிய தருகின்றேன். |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நடாத்தப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிடப்பட்ட சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். | ஒரு குழுக் கூட்டமொன்று நடாத்தப்பட்டுள்ளதாகவும் எதிர்காலத்தில் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். |